# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மக்கள் வங்கி (திருத்தம்)

***1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நிதி அமைச்சர் அவர்களால் 2019, மே மாதம் 24 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, யூலை மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

***[ 282 ஆம் சட்டமூலம் ]***

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2**: இவ்வாசகம், வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்தை அதிகரிப்பதன்மூலம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 3**: இவ்வாசகம், தொகுதிக்கடன்களை வழங்குவதன்மூலம் எவையேனும் பணத்தொகைகளை திரட்டுவதற்கு வங்கியை இயலச்செய்து முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 4**: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுக்கு 3 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாய்ந்தன்மையின தாகும்.

**வாசகம் 5**: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 3 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாய்ந்தன்மையினதாகும்.

ச.வ.-ஓ 46/2013

**1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மக்கள் வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.*

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:-

"மூலதனம்.

12. (1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம், ஒவ்வொன்றும் ஐம்பது ரூபா கொண்ட ஒரு பில்லியன் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட ஐம்பது பில்லியன் ரூபா ஆதல் வேண்டும்.

(2) (அ) தேசிய அக்கறைக்கு அவசியமானதெனக் கருதப்படுமிடத்து வங்கியின் செலுத்தப்பட்ட மூலதனம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படலாம்.

(ஆ) அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.

"வங்கியானது நடுத்தரக்கால, நீண்டகாலக் கடன்களை கொடுப்பதற்காக தொகுதிக் கடன்களை வழங்குவதன் மூலம் பணத்தைத் திரட்டுதல்.

20. (1) வங்கியானது, நீண்டகால அல்லது நடுத்தரக்காலக்கடன்களை கொடுக்கும் நோக்கத்திற்காக 15(1) (ஆ) என்னும் பிரிவின்கீழ் வங்கிக்கு அரசாங்கத்தினால் கடனாகக் கொடுக்கப்பட்ட பணத்தொகைக்கு மேலதிகமாகவும் மற்றும் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் தொகுதிக் கடன்களை வழங்குவதன் மூலம் எவையேனும் பணத்தொகைகளை அமைச்சரின் அங்கீகாரத்துடன் திரட்டலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக "அமைச்சர்" என்பது எவ்வமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் எனப் பொருள்படும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது, அப்பிரிவின் - முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(1) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்குவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினையும் நீக்குவதன் மூலமும்,

இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.